# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 8920 / 78.*

Established: 1841 ○ Published Every Friday

Vol. 140 JAFFNA, FRIDAY, 21ST MARCH, 1980 No. 12

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE


*Editor's Note*

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.

*Subscription*

Inland: Rs. 30/- per year.
Foreign Air Mail: Rs. 90/- per year.
*Apply to:*
The Manager, 'Morning Star', VADDUKODDAI.

## South Asia Bishops' Retreat and Conference

The Bishops of the Church of South India, Church of North India, the Mar Thoma Syrian Church and the Church of Bangladesh met for a Retreat and Conference at the YMCA Hostel in New Delhi from the 26th of February to the 2nd of March. Such an event would have gladdened the hearts of pioneers of the Church Union Movement like Azariah, Banninga, Whitehead and Palmer. It was indeed one more forward step in the long march of the Unity of God's people in South Asia and a foretaste of the realisation of the One Church in our lands. While the CSI and CNI brought together the rich heritage of the diverse missionary traditions, the Anglican Presbyterian, Congregational, Methodist and Baptist, the coming of the Mar Thoma Bishops brought in the ancient heritage of the Indian Church dating back to the arrival of St. Thomas in Kerala in the first Century and the Eastern tradition in particular. The Bishops met like this for the first time and the occasion has justified similar meetings once in three years.

Speakers at the Retreat included the Archbishop of Wales, the Most Rev. Gwynn Williams, a leading Methodist Theologican from Britain, the Rev. Dr. Donald English, an African Bishop from Kenya, the Rt. Rev. David Gitari and an Australian Bishop, the Rt. Rev. Jack Dain.

*Mrs. Gandhi's Visit*

Mrs. Gandhi, the Prime Minister of India visited the Bishops' Conference and had tea with them. Though it was an informal occasion she spoke some moving words. Christians in India, she said, have been in the forefront of public life and have contributed a great deal to the development of the nation. In the fields of Education, Medical Services, Social Uplift and work for the poor and the handicapped, Christians have given a lead and have made a significant contribution. Many Christians took part in the nation's freedom struggle and in the frontier wars after Independence a large number of Christian soldiers have given their lives for the Country. If therefore, Mrs. Gandhi continued, her Government will work for human rights and also for the rights of the Christian Community, it is not a case of the nation bestowing a favour on Christians but a favour it bestows on itself because the nation owes it to itself as to the Christian Community.

The Bishop of our Diocese, the Rt. Rev. D. J. Ambalavanar was one of the participants at this Conference.

*The Church of South India*

## THE JAFFNA DIOCESAN COUNCIL SESSIONS, 1980

The 33rd Annual Meeting of the Jaffna Diocesan Council was held from March 13 — 15 at Vaddukoddai. The Bishop gave his 'charge' at 9-30 a. m. on the first day of the Sessions.

Votes of condolence were passed on the deaths of the following:—

Mr. J. Vinayagam proposed by Mr. S. S. Muthiah
Mrs. K. S. Saravanamuttu proposed by Mrs. S. J. Somasundaram
Mr. T. W. Ponnuchamy proposed by Rev. S. T. Aseervatham
Mr. V. R. Ratnam proposed by Rev. E. D. Rasaratnam
Mr. D. S. Sanders proposed by Mr. K. S. Selliah
Mr. M. R. M. Jebaratnam proposed by Rev. K. S. Jeyasingam
Mr. V. S. Muthucumaru proposed by Rev. N. Subramaniam

*New Features*

Among the new features in the Council deliberations this year was the inclusion on the main Agenda of a Bible Study on the theme "*God's People in God's Mission*" by Rev. S. S. Arulampalam, and also the introduction of a Scheme by which Selected Groups study in advance the reports of Standing Committees due to be submitted before the plenary sessions the next day. This Scheme was found to be fruitful of results as, much of the thinking in concentrated form was done earlier and it was instructive for delegates to find what views other members of the Council, besides those belonging to the respective Standing Committees, hold, on the issues covered by the Reports.

A Cultural Programme in the Otley Hall, to entertain visitors and a Garden Party in the College Quadrangle at which Heads of other Denominations, the Government Agent, Jaffna, the Director of Education, Northern Region, the Honourable the Leader of the Opposition in Parliament, the Member for Vaddukoddai and other distinguished guests were present on invitation, added an aura of dignity and camaraderie to the proceedings of the Council this year.

*Our Tasks as seen from 'within and 'without'*

Two Guest speakers addressed the Sessions of the Council this year. Dr. K. Sivathamby of the University of Jaffna spoke on "What the Hindus expect of Christians in Jaffna in the Socio-Economic Sphere" and Rev. S. W. Ariarajah, Chairman of the North and East Districts of the Methodist Church in Sri Lanka on "The Aspirations and Tasks of the Church as viewed from within".

*New Office Bearers*

Rev. Sam Thampoe has been elected Secretary of the Jaffna Diocesan Council and Mr. S. S. Sellathurai has been re-elected Treasurer. Names of other Office Bearers and Chairmen of Standing Committees will appear in our next issue.

## Japanese Theologian joins Union Theological Seminary

The Union Theological Seminary in New York has a new Professor for Ecumenics and World Christianity. He is none other than Dr. Kosuke Koyama, the well known author and Japanese Theologian.

He was in Thailand for eight years as a missionary and in Singapore for six years involved in theological Education. Till recently he was in the Department of Religious Studies at the University of Ottago.

## Chinese Religion Revives

Eight Chinese religious Leaders went to the USA as delegates for the Third Assembly of the World Congress on Religion and Peace held in Princeton, New Jersey.

The group included Buddhist, Muslim and Christian leaders, one of whom was an Anglican Bishop whose authority was removed 13 years ago. It is the second time in 30 years that religious leaders have been allowed to visit the USA.

*Colombo Church*

## Music Examination Success

Three children of Mr. K. Suhirtharatnasingam, Engineer, Secretary of the Colombo Church and of Mrs. Suhirtharatnasingam, have been successful in the London Music Examinations.

*Priyani* has passed the L. R. S. M. and the L. T. C. L. (London) in Pianoforte, *Sahuntala* has passed her L. T. C. L. also in Pianoforte while *Nimal* has passed the Grade 8 Examination in Violin of the Royal College of Music (London) with distinction.

They are students of Mrs. Billimoria of the Pestonjee School of Music, Colombo.

*IN BRIEF ............*

● *British Minister of Overseas Development, Neil Martin* will arrive in Sri Lanka to participate in the ceremonies that would mark the Inauguration on March 23rd of the Victoria Project, as Premier Margaret Thatcher's Special Envoy. The Sunday Driving Ban will be lifted on this day. The British government has given 3500 million Rupees (100 million pounds) as an outright grant for this project.

## ANNUAL SUBSCRIPTION

The Annual Subscription of the Morning Star has been incrersed from Rs. 25/- to Rs. 30/-.

The sudden increase in postage and printing charges have compelled us to take this decision which, we are sure, our patrons will appreciate.

— **Manager.**


**C I S R S**
**Jaffna**

invites you to

**CONTINUING THEOLOGICAL EDUCATION**

(a Refresher Course in Theology and Biblical Studies)

at the Bunker Hall of Residence, Jaffna College, Vaddukoddai

**from Monday, 14th April to Friday, 25th April, 1980.**

Registration — 10/-
Books, Board and Lodging — 35/-
(Subsidised rate)

***Apply to:***
REGISTRAR,
Continuing Theological Education,
Jaffna College, Vaddukoddai

**J D C S I**
**YOUTH FEDERATION**

presents two plays by
**Rev. Dr. Dayanandhan Francis**
at
TRIMMER HALL, JAFFNA
on
**March 28th and 29th**
**at 6-30 p. m.**

Tickets: Rs. 5/- Rs. 3/- Rs. 2/-
Children under ten: Rs. 2/-

**UDUVIL GIRLS' COLLEGE**
**EASTER SERVICE**
on
**Friday, 28th March, 1980**
**at 6-00 p. m.**
at the Uduvil Church.
Message: **Dr. W. R. Holmes**
*All are cordially invited*

**EASTER VESPERS**
**JAFFNA COLLEGE CHOIR**
**Sunday, March 30**
**6-00 p. m.**
Vaddukoddai Cathedral Church

# உதயதாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

## தாரகை ஒளி

மனிதனே! நலமானது இன்னதென அவர் உனக்குத் தெரிவித்திருக்கிறார்: நியாயஞ்செய்து மனதார இரக்கத்தைப் பாராட்டி, உன் கடவுளுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதையே அல்லாமல் வேறே எதைக் கர்த்தர் உன்னிடம் கேட்கிறார். — மீகா 6:8

மலர் 140] 21 — 3 — 1980 [இதழ் 12

## வளர்ந்து வரும் வன்முறைகள்

தமிழ் மக்கள் ஒரு காலத்தில் அமைதிக்கும் சமாதான வாழ்விற்கும் பெயர் பெற்றவர்களாயிருந்தனர். சமயம், கல்வி, உத்தியோகம் சேமிப்பு என்பவையே அவர்களது வாழ்வில் முக்கிய பங்கு வகித்தன. "அமுதம் அவனது மொழியாகும் அன்பே அவனது வழியாகும்" என்பது நாமக்கல்லார் பாடல். சண்டைச் சச்சரவுகள், வன்முறை சம்பவங்கள், திவைப்பு சம்பவங்கள் சமீப காலம் வரை தமிழ்ப் பிரதேசங்களில் அருகியே காணப்பட்டன. அமைதியையும் பாதுகாப்பையும் விரும்புபவர்கள் தமிழ்ப் பிரதேசங்களில் வந்து குடியேறுவர்.

ஆனால் இன்று தமிழ்ப் பிரதேசங்களில் காணப்படும் நிலைமை என்ன? நாளிதழ்களைப் புரட்டிப்பார்க்கும் பொழுது நாள் தோறும் கொலை, கொள்ளை, தாக்குதல் சம்பவங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. சென்ற வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த ஒருவரையே எதிரிகள் வந்து அடித்துக் கொன்று விட்டுப் போயிருக்கின்றனர். கல்லூரி அதிபர்கள் ஆசிரியர்களின் சம்பளத்தைப் பணமாகக் கொடுக்க முடியாதென்று மறுத்துள்ளனர். நகைத்திருட்டு நாள் தோறும் நடந்து வருகின்றன. அமைதியான யாழ்ப்பாணத்திற்கு என்ன வந்துவிட்டது? குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கப் பொது மக்கள் ஒத்துழைப்புத் தருவதில்லையென்று பொலீஸ் பகுதியினர் கூறுகின்றனர். அவர்கள் கூறுவதை நாம் முற்றாக மறுக்க முடியாது. ஆனால் இனக்கலவரத்திற்குப் பின்னர் பொலீஸ் பகுதியினருக்கும் தமிழ்மக்களுக்குமிடையிலான உறவு பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இன்று பொலீஸ் பகுதியினர் சீர்குலைந்துபோன உறவைப் பலப்படுத்தப் பல்வாறு முயன்று வருகின்றனர் அவர்கள் முயற்சி பலனளிக்க வேண்டும். ஆனால் பொலீஸ் பகுதிமட்டும் வன்முறைகளை அடக்கிவிட முடியாது மக்கள் பொறுப்புணர்ச்சியுள்ளவர்களாய் நடந்து வரவேண்டும் யார் என்ன கேடு கெட்டாலும் நானும் எனது குடும்பமும் சேமமாக இருந்தாற் போதும் என்ற மனோநிலை மாற வேண்டும். வன்முறைகண்டவிடத்து சத்திய ஆவேசம் எழவேண்டும் இவ்வகையில் யாழ் வைத்தியசாலையில் கொலையாளிகளில் ஒருவரை மடக்கிப் பிடித்த வைத்தியசாலை ஊழியர்களை எப்படிப் பாராட்டினாலும் தகும். அந்த மனோநிலை மக்கள் மத்தியில் வளர வன்முறை மறையும்.

## JCTI இராப்போசன விருந்து

யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவன மாணவ மன்றத்தின் வருடாந்த இராப்போசன விருந்து சென்ற சனிக்கிழமை (15-3-80) மாலை மன்றத் தலைவர் R. V. சிறீதரன் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினர்களாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும் கலந்து கொண்டனர்.

## யாழ்ப்பாணத்தின் தொல் பொருட் காட்சிசாலை

நல்லூரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தொல்பொருட் காட்சிசாலை (Museum) விரைவில் திறந்து வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தற்பொழுது யாழ். பிரதான வீதியில் அமைந்த தொல் பொருட்கள் யாவும் விரைவில் நல்லூரிலுள்ள புதிய கட்டிடத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

## கலாநிதி ஹோம்ஸ் சுயதேசம் திரும்புகின்றார்

யாழ்ப்பாணக் கல்லூரியில் நீண்டகாலம் பணியாற்றிய கலாநிதி W. R. ஹோம்ஸ் அவர்களும் திருமதி ஹோம்ஸ் அவர்களும் இவ்வருடம் ஏப்ரல் மாதம் சுயதேசம் திரும்புகின்றனர்.

## அத்தியட்சாதீன சங்கத்தின் ஆளுகைச் சபைக் கூட்டம்

இம்மாதம் 13ம் 14ம் 15ம் திகதிகளில் நடைபெற்ற அத்தியட்சாதீன ஆளுகை சங்கக் கூட்டத்தில் பல குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் நடைபெற்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் கா. சிவத்தம்பி அவர்களும், வடகிழ் மாவட்ட மெதடிஸ்த சபைத்தலைவர் வண. வெஸ்லி அரியராஜ் அவர்களும் விசேட உரைகள் நிகழ்த்தினர். கலை நிகழ்ச்சிகளும் இரவில் நடைபெற்றன.

சபைக் கூட்டத்தில் பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

செயலாளர்: வண. சாம் தம்பு.

பொருளாளர்: திரு. S. S. செல்வத்துரை.

நிர்வாகசபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

வண K. S. ஜெயசிங்கம், வண. S. N. சுகுணாநந்தன், திரு. A. இராஜசிங்கம், திரு. L. A. C. கனகசிங்கம், திரு. S.A. பாலரத்தினம் திரு. P. S. இரத்தினவேல்.

### தபசு காலச்சிந்தனை

## "வனாந்தரத்தில் அழைத்துக் கொண்டு போய் அவளிடம் பட்சமாய் பேசுவேன்"

ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கையில் தபசு காலம் மிக முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகும். மனிதனின் வாழ்க்கை சதா போராட்டம் நிறைந்ததாகக் காணப்படுகிறது. அதுவும் இன்றைய நிலையில், உணவுக்காகப் போராட்டம், உதவிக்காகப் போராட்டம், உயர்ச்சிக்காகப் போராட்டம், உழைப்புக்காகப் போராட்டம் இத்தேவைகள் நிறையும்போது மறுபடியும் உள்ளத்திலே போராட்டம் தொடர்கிறது. உலகிலே நெருக்கடி நிறைந்த ஒரு காலகட்டத்திலே வாழ்கிறோம். உலக அரங்கிலே அரசியல், சமூக, பொருளாதார நிலை அங்கலாய்ப்பையும் தவிப்பையும் ஊற்றி, சஞ்சலத்தைக் கொடுக்கிறது. சன சமுத்திரம் ஏங்கி விழித்து முழிக்கிறது. விரக்தியூட்டும் இந்த நிலையிலும் கூட, ஒரு கூட்டம் மக்கள், நடக்கிறவைகளைப் பற்றிக் கவலை இல்லாது, இனிச் சம்பவிக்கப் போகிறவைகளைக் குறித்து நம்பிக்கையோடு மகிழ்வாக வாழ்கிறார்கள் என்றால், அவர்கள்தான் கிறீஸ்தவர்கள். ஒரு புதிய வானத்தையும், புதிய பூமியையும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அவருடைய ராஜ்யம் வரக் காத்திருக்கிறார்கள். 'தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளேயே இருக்கிறது' என்றார் ஆண்டவர். "பூமி என் பாதபடி, வானம் என் சிங்காசனம்." இது சிருஷ்டிப்பு யாவும் உணர்ந்தறிந்த உண்மை. கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார். பூமியெல்லாம் அங்கலாய்ப்பை விட்டு நம்பிக்கையோடு தன்னிற் தரித்திருக்கும்படி ஆண்டவர் அழைக்கிறார். தவிக்கும் நாமும் யாரிடம் போவோம்?... பேதுருவோடு சேர்ந்து "ஆண்டவரே நாங்கள் வேறு யாரிடம் போவோம். ஜீவனுள்ள வார்த்தைகள் உம்மிடத்தில் நிரப்ப உண்டே" என்று கர்த்தரிடத்திற்கே திரும்புவோம் இந்த ஜீவனுள்ள வார்த்தைகளைத் தரித்திருந்து, தனித்திருந்து, விழித்திருந்து, தியானிக்கும் காலம் தான் "தபசு காலம்". "அவர்களை வனாந்தரத்தில் அழைத்து வந்து, என் கட்டளைகளை அவர்களுக்குக் கொடுத்து, என் நியாயங்களை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்" (எசேக். 20 10,11) என்று கர்த்தர் கூறுகிறார். இஸ்ரவேலரை வனாந்தரத்துக்கு அழைத்துத் தன் வார்த்தைகளைத் தெரியப்படுத்தினார். அவருடைய கற்பனைகளையும், புத்திமதிகளையும் பெற்றுக்கொள்ள வனாந்தரம் அவசியமாகிறது. வனாந்தர சஞ்சாரத்தின் முடிவில், இஸ்ரவேலர் பாலும், தேனும் ஓடுகிற கானானைச் சுதந்தரித்துக் கொண்டார்கள் என நிச்சயமாக நாம் அறிவோம். வனாந்தரத்தில் வேறு சத்தங்கள் இல்லாதபடியால், தேவனுடைய சத்தத்துக்கு செவி சாய்ப்பது இலகுவாயிருக்கிறது. ஆகவே, "ஓசியா 2:14ல், "வனாந்தரத்தில் அழைத்துக் கொண்டுபோய் அவளிடம் பட்சமாய்ப் பேசுவேன்" என்கிறார். இந்த உபவாச காலத்தில் நம்மையும் தன்னோடு வனாந்தரத்திற்கு அழைத்து பட்சமாய்ப் பேச விரும்புகிறார் ஆண்டவர்.

உபவாசம் என்பது ஒரு சில காரியங்களைச் செய்து, இன்னோர் சிலவைச் செய்யாது விடும் ஆசரிப்பின் காலம் அல்ல. உப அதிபர், உப தலைவர், உப வேந்தர் என்ற கருத்தமைய, கர்த்தரோடு அவருக்கு அடுத்தபடி வாழ்ந்து பெறும் வனாந்தர ஜீவிய அநுபவமே, உபவாசம் என்றால் அது சாலப்பொருந்தும். சில காலங்களுக்கு முன் இலங்கை வந்து சொற்பொழிவுகள் ஆற்றிய ஞானி தவத்திரு குன்றக்குடி அடிகளார் உபவாசத்தைப் பற்றிச் சொன்னதைக் கேளுங்கள். "மாமிசம் உண்ணாதிருப்பதுதான் உபவாசம் என்றால், வாழ்நாள் முழுதும் தாவர போஜனம் உண்ணும் ஆடு மாடுகள் உபவாசம் செய்கின்றன என்று கருதலாமா?... பட்டினி கிடப்பது தான் உபவாசமென்றால், விடுமுறை காலங்களில் பாடசாலை போன்ற ஸ்தாபனங்களில், மூட்டைப் பூச்சிகள் பட்டினி கிடக்கின்றதே... அவை உபவாசிக்கிறதென்று சொல்லலாமா?... ஒருவேளை உணவை உண்ணாதிருப்பதுதான் உபவாசமென்றால், உலகில் கோடானு கோடி ஏழைகள் ஒருவேளை உணவோடு வாழ்கிறார்களே இவர்கள் உபவாசம் செய்கிறார்கள் என்போமா?..."

இக்கருத்து நம்மை ஆழ்ந்து சிந்திக்க வைக்கிறது. இல்லையேல் ஒதுங்கி, அடங்கி வாழ்வது தான் உபவாசம் என்போமானால் பொல்லாத நாகம், புற்றிலே ஒதுங்கி, அடங்கி வாழ்கிறதே இது உபவாசிக்கிறதா?... சுய ஒறுப்பு எதற்கு? மிச்சம் பிடித்து சேர்த்து வைக்க அல்ல. இல்லாதவனோடு பகிர்ந்து கொள்ள ஒறுப்பதும் ஒதுங்கி வாழ்வதும் நன்மை பயக்கக் கூடும். ஆனால் உபவாசத்தின் மையப்பொருள் இதுவல்ல. கிறிஸ்துவோடு நெருங்கி வாழ்தலே கிறிஸ்தவனின் உபவாசம். கிறிஸ்து நம்மையும், தம்மோடு வனாந்தரத்திற்கு வரும்படி பட்சமாக அழைக்கிறார். நம்மிலுள்ள தீய குணங்கள் மாறுவதற்கு, வனாந்தர அநுபவம் மிக அவசியம்.

"யுத்த புருஷரான யாவரும் மாளுமட்டும், இஸ்ரவேல் புத்திரர் 40 வருஷம் வனாந்தரத்தில் நடந்துதிரிந்தார்கள்" (யோசுவா 5 6) நம் அகங்காரம் அடங்குமட்டும் வனாந்திர ஜீவியம் அவசியமாகிறது. கிறீஸ்துவின் சபையைக் கட்டி எழுப்பும் பணியில் ஈடுபடும் எந்த மனிதனும் முற்கோபக்காரனாக, பகைமை பாராட்டுபவனாக, பொருளாசைக்காரனாக, குரோதம், விரோதம் பாராட்டுபவனாக இருக்கமுடியாது. இது வேத சரித்திரம் கூறும் உண்மை. கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் கட்டத் தாவீது ராஜாவிடம் பணம், பொருள், பலம், வாஞ்சை யாவும் இருந்தும், தேவன் அவனை ஆலயம் கட்ட வேண்டாமென்று தடை விதித்தார். இதற்குரிய காரணத்தை தாவீதே கூறுகிறார். "ஆனாலும் தேவன்; நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்ட வேண்டாம். நீ யுத்த மனுஷனாயிருந்து ரத்தத்தைச் சிந்தினாய் என்றார்" (1 நாளா: 28 : 3)

கர்த்தரோடு வனாந்தர சஞ்சாரம் நம்மைப் புதியவர்களாக மாற்றுகிறது மட்டுமல்ல, எதையும் தாங்கும் இதயம் உள்ளவர்களாக வலுவளிக்கிறது.

இந்தப் புனித தபசு காலத்தில் கிறீஸ்துவோடு நெருங்கி வாழ்ந்து அவர் பாடுகளை

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## உதவிக்கு அபிசேக ஆராதனை

சென்ற சனிக்கிழமை (15-3-80) அச்சுவேலிச் சபை ஊழியன் திரு A. V. இயேசுதாசன் வட்டுக் கோட்டைத் தேவாலயத்தில் உதவிக் குருவாக, மகாகனம் D. J. அம்பலவாணர் அவர்களினால் அபிடேகம் பண்ணப் பட்டார். அபிடேகம் பண்ணும்படியாக திரு A. V. இயேசுதாசன் அவர்களை வண. D. C. இரத்தினசிங்கம் முன் நிறுத்தினார். அருளுரை. வண. D. R. அம்பலவாணர் அவர்களினாலே வழங்கப்பட்டது. திரு. P. J. தம்பிரத்தினம், திருமதி T. அழகரத்தினம், திரு. M. இராஜரத்தினம் ஆகியோர் வேதப்பாடங்களை வாசித்தனர். லித்தானியா ஜெபம் திரு. இருபைராஜா. செல்லையாவினால் ஏறெடுக்கப்பட்டது. அபிடேக ஆராதனை முடிந்ததும் ஆராதனையில் கலந்து கொண்டவர்கட்கு காலைப்போசனம் வழங்கப்பட்டது.

## புதிய நீதவான்

யாழ்ப்பாண மாவட்டத்தின் நீதவானாகப் பண்டத்தெருப்புச் சபையைச் சேர்ந்த திரு. T. யோகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் கொழும்பில் நீதவானாகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கால அளவில் ஒரு தேவாலயம்

இங்கிலாந்தில் சலிஸ்பெரியில் ஒரு அழகிய தேவாலயம் உண்டு. இதிலே ஒரு வருடம் பன்னிரண்டு மாதங்கள் உள்ளதைப் போல் பன்னிரண்டு கதவுகள் உள்ளன. மாதத்தில் முப்பத்தொரு நாட்கள் இருப்பதைப் போல் முப்பத்தொரு ஜன்னல்கள் இருக்கின்றன. ஒருநாளில் இருபத்திநாலு மணித்தியாலங்கள் இருப்பதைப்போல இருபத்திநாலு பெரிய தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒரு மணியில் எவ்வளவு நிமிடங்களோ அவ்வளவு சிற்பங்கள். ஒரு நிமிடத்தில் எத்தனை செக்கண்டுகள் உண்டோ அவ்வளவு இலைகள்.

## கிறிஸ்த சேவ ஆசிரமத்தில் கத்தோலிக்க மாணவர்

யாழ்ப்பாணத்து பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் சென்ற மாதம் (24-2-80) மருதனுமடம் கிறிஸ்த சேவ ஆசிரமத்தில் ஒரு ஞான ஒடுக்கை நடாத்தியது — அந்த ஞான ஒடுக்கத்தைப் பற்றியும் கிறிஸ்த சேவ ஆசிரமத்தைப்பற்றியும் கத்தோலிக்க மாணவர் ஒருவர் பாதுகாவலனில் எழுதியதனைப் படியுங்கள்.

இரைச்சலும் சந்தடியும் மிகுந்த வளாகச் சூழலிலிருந்து விடுபட்டு, ஒரு சில மணித்துளிகளை அமைதியாக இறைவனுடன் செலவிட ஒரு வாய்ப்பு, மருதனுமடம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தில் 24-02-80 ஞாயிற்றுக்கிழமை, யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் தவக்காலச் சிந்தனைகளை மேற்கொண்டது.

'திராவிட கட்டிடப் பாணியில் அமைக்கப் பட்டிருக்கும் அழகிய அக்கிறிஸ்தவ ஆலயத்தின், சாந்தேருட்டம் நிறைந்த தூண்களுக்கிடையே அமர்ந்திருக்கும் எங்கள் மத்தியில். கிறிஸ்து பிரான் தாமே வந்து வீற்றிருக்கிறார். அவர் தம்மோடு செலவிடப்போகும் இத்தவக்கால சிந்தனை நாளை அவருடைய பிரசன்னத்தை நம் மத்தியிலிருந்து அகற்றும் இடையூறுகளிலிருந்து நீக்கி, நம்மை அவர் காலடிக்கு முழுமையாகக் கொண்டுவர அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது' என்று ஆரம்ப உரையை நிகழ்த்திய அருட்திரு ஜெயசீலன் அவர்களால் கூறப்பட்டது. "யாரிடம் செல்வோம் இறைவா" என்ற மாணவரின் மனவெழுச்சிக்குப் பதில்கூறும் வகையில் சகோதரர் சாம் ஆல்பிரட் அவர்கள் உரையாற்றினார்கள். "இறைவன் தமது சாயலாக மனிதனை உருவாக்கினார், ஆனால், அந்த சாயலை நாம் இழந்து விட்டோம். இன்று போராட்டங்கள் மாருட்டங்கள் மத்தியில் வாழும் நாம் இழந்துவிட்ட இறைவனின் சாயலைத் திரும்பிப் பெறவேண்டும்" என்றார். இறைவனின் சாயலை மீண்டும் எம்முள் நிலை நிறுத்த வேண்டும் என்ற கருத்தில் அவரது உரை அமைந்தது.

இதனைத் தொடர்ந்து மாணவர் குழுக்களாகப் பிரிந்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர். வனாந்தரத்தில் கிறிஸ்துவை அலகை சோதித்த சம்பவம் மாணவரின் தனித்த வாழ்க்கையுடன் இணைத்துச் சித்தரிக்கப்பட்டது. மனக்கட்டுப்பாடு செபம், இறைவனோடு ஒன்றித்தல் ஆகியவற்றால் சோதனைகளை வெற்றி கொள்ளலாமெனும் கருத்து முன் வைக்கப்பட்டது.

மதிய உணவின் பின் சிலுவையின் வழி சிந்தனைகள் இடம் பெற்றன; சிலுவைப்பாதையின் ஒவ்வொரு நிலையத்திலும் மாணவரின் குரல்கள் சமுதாயத்தின் உள்ளக் குமுறல்களைப் பிரதிபலித்தன. கிறிஸ்துவின் பாடுகள் இன்றைய கொடுமைகளுடன் இணைத்துச் சித்தரிக்கப்பட்டன. குற்றமற்றவர்கள் தண்டிக்கப்பட்டுக் கொடுமைப்படுத்தப்படுதல், அடிப்படை மனித உரிமைகள் அவர்களுக்கு மறுக்கப்படுதல் ஆகியன சிலுவையின் பாதையில் சித்தரிக்கப்பட்டன, கொடூரமான பாடுகளின் பின்னும் கிறிஸ்து உயிர்த்தெழவில்லையா? கிறிஸ்து உயிர்விடும் நிலையத்தில் திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. சுற்றில் நன்றிக் கீதத்துடன் அன்றைய நிகழ்ச்சிகள் முடிவு பெற்றன.

கலை, விஞ்ஞான, மருத்துவப் பீடங்களிலிருந்து 61 மாணவர்கள் பங்குபற்றியமை, நாளை கிறிஸ்தவ சபைகளுள் இவ்வறத்தோர் மத்தியிலும் தரமான கிறிஸ்தவ தலைவர்கள் உருவாகுவார்கள். என்ற அறிகுறியாகவும் எடுத்துக் கொள்ளலாம். சபைகளின் மத்தியிலே ஏற்படுகின்ற ஐக்கியத்திற்கு முன்னோடியாக வளாக மாணவர்களும் இங்கு ஒன்று கூடியது கிறிஸ்தவ ஐக்கியத்தின் நீண்ட பிரயாணத்திலே ஒரு குறிப்பிடத்தக்க கட்டமாக அமைந்திருந்தது: இதில் கத்தோலிக்க கிறிஸ்தவ, ஓரிரு இந்து நண்பர்களும் பங்கு பற்றியமை வளாகத்தில் பல மதத்தினரிடையே நிலவிவரும் ஒரு பரஸ்பர உறவிற்கு எடுத்துக் காட்டாகும்.

செல்வி சீ. கிறிஸ்தோப்பர்

## "பலதும் பத்தும்"

கல்வியின் பொருள்

Education: (Drawing Out) உள்ளிருக்கும் ஒன்றை வெளியே இழுத்தல்.

Learning: (Remembrance) உள்ளிருக்கும் ஒன்றை உணர்ந்து கொள்ளல். — சோக்கிறீஸ் ஞானியார் வாக்கு.

சுவிசேஷ ஊழியத்தில் பிரவேசிப்பவனுக்கு முதுசொப் பொருளும் சீதனச் சொத்துமாய் வைக்கப்பட்டவை முறையே நித்திய தரித்திரம். எல்லாரும் தன்னில் கூறுங் குறைகளையும் குற்றங்களையும் பொறுமையாய்க் கேட்டுச் சகித்தல். — கனம் கந்தையாப்போதகர் தேவ ஊழியத்துக்குப் போக ஆலோசனை கேட்டவனுக்குக் கொடுத்த பதில்.

* * *

கனம் வீரகத்திப் போதகர் ஒருநாள் வகுப்பில் படம் எடுக்கும் முறையில் தற்காலம் விசேஷ கருவிகளைக் கொண்டு சமுத்திரத்திலும் ஆகாயத்திலுமுள்ளவைகளைப் படம் பிடித்துக் காட்டுகிறார்கள். இருதயத்தைப் படம் பிடித்துக் காட்டும் கருவியைக் கொண்டு வந்தால் உங்களில் எத்தனைபேர் படம் பிடிக்க ஆயத்தம்? என்றார்.

— கனம் வீரகத்திப் போதகர் வாக்கு.

* * *

பக்தர் எல்லாரும் வித்தியாசம்
வித்தியாசமான பெயரில்
ஒருவரையே வணங்கினர்.

நாவரசர். சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் முன் பூசை செய்த நம்பன் ஒரு சிவனே.

பாவரசர், திருமங்கை, நம்மாழ்வார் முதலாம பகவதர்கள் பணி கொண்ட அச்சுதனே மாலே.

தேவடியார், ஆமோசோ டேசாயா மீகாதே சிகர்கள் உளம் வாழும் யெகோவா மூர்த்தி.

மூவுலகும் வாழ்த்துகிற யேசுகுரு நாதன் முகம் விளங்கும் என் நாதா என் நாதா நீயே.

— கனம் அழகசுந்தரம் கிப்ஸ்பர்.

* * *

கிறிஸ்த மிஷன்களின் பரவுதலும் நன்மைகளும்.

இந்தியா தேசத்தை உயர்த்துவதற்கு ஓர் பகிரங்கக் கூட்டம் கூடி அதற்கு என்ன தேவை என்றபோது ஒருவன் எழுந்து 'சூத்திரங்களே 'மெஷினறி'' என்றான். வேறொருவன் அல்ல அல்ல "மிஷனரிமாரே மிஷனரி' என்றான். பிந்தியவன் சொன்னதையே ஒப்புக்கொண்டனர் இந்தியாவுக்கு மாத்திரமல்ல உலகமெங்கும் அதே தேவை அவ் வேலைகளின் விசாலம் :- மிஷனரிமார் 28000, ஒய்வுநாள் பாடசாலை 36610, மாணாக்கர் 20,00000, வைத்தியசாலைகள் 703, ஆஸ்பத்திரிகள் 1234, நோயாளர் 30,000 00, அனாதைசாலை 245, குருடர் செவிடர் பாடசாலை 25, குஷ்டரோக வைத்தியசாலை 39. அவர்கள் பிள்ளைகளை வளர்க்கும் சாலை 21, விதவைகள் சாலை 21, கல்லூரிகள் சர்வகலாசாலைகள் 109, விடுதிப பாடசாலைகள் 2114, ஆதார பாடசாலைகள் 36475, பாலர் வகுப்பு பாடசாலை 376, வைத்திய கல்லூரி 30, நேஷ்மாரி பயிற்சிச்சாலை 95, வேத சாஸ்திரக் கல்லூரி 406, கைத்தொழிற் சாலை 209, மாதிரிப் பாடசாலை 240. இவை கிறிஸ்த மிஷன் ஸ்தாபனங்கள். இவைகளால் வந்த பலன் அதிகம். அதிகம்.

— ஓர் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.

தென் இந்திய திருச்சபை
யாழ்ப்பாண அத்தியட்சாதீனம்
வாலிபர் பேரவை
அளிக்கும்
நாடக விழா
(கலாநிதி தயானந்தன் பிரான்ஸிஸின் இரு நாடகங்கள்)
மார்ச் 28-ம் 29-ம் திகதிகளில்
மாலை 6-30 மணிக்கு
யாழ். றிம்மர் மண்டபத்தில்
நடைபெறும்.
ரிக்கற் ரூ. 5/-, ரூ 3/-, ரூ. 2/-
10 வயதுக்குட்பட்ட
பிள்ளைகட்கு ரூ. 2/-

## வனாந்தரத்தில் அழைத்துக்..........

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உணர்ந்து அதிலே பங்குகொள்வோம் என்றோ ஆண்டவர் சுமந்து முடித்த சிலுவையை நாம் எப்படிச் சுமந்து பங்கெடுப்பது என்று நினைக்கிறீர்களா? கிறிஸ்துவே பதிலளிக்கிறார். "என் சிலுவையை அல்ல. உங்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றி வாருங்கள்" என்று. வெறுங்கையோடு அல்ல. சிலுவையை எடுத்துக்கொண்டு நாற்பது நாள் வனாந்தரத்திற்குப் போவோம் வாருங்கள். அங்கே ஆண்டவர் நம்மோடு பட்சமாய்ப் பேசக் காத்திருக்கிறார். "வனாந்திரத்திற்கு அழைத்துக் கொண்டுபோய் அவரிடம் பட்சமாய்ப் பேசுவேன்"

ஓசியா 2,4.

— G.S. V.

மக்கினென் டிரவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்
உங்களை
திருச்சிராப்பள்ளி, மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர்,
பரிஸ், லண்டன். துபாய், சவூதி அரேபியா, கனடா
ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல
மற்றும்
பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும்
விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை
கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில்
ஒழுங்கு செய்துகொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,
தபால்பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!!

*EDITORIAL*

## People and Mission

*God's People in God's Mission* was the theme of the Thirty-third Annual Meeting of the Jaffna Diocesan Council of the Church of South India, which concluded its sessions on Saturday (15-3-80).

The theme was the subject of a Bible Study on 14-3-80 by Rev. S. S. Arulampalam and also was reflected in the Sermon preached by Rev. D. R. Ampalavanar at the Service of Ordination as Deacon of our Worker at Atchuvely.

As we sat through the sessions of the Diocesan Council this year, we were increasingly reminded of the meaning of an anecdote which we came across recently in a book of meditations.

Three men were watching a speeding train. "Here it comes," said the first. "Here it is," said the second. "There it goes," said the third. But the fourth man who was in the train as it sped past, cried out to them, "*Here I am.*"

We as a Christian Church today are no longer spectators in a world of fast moving events. We are "passengers" involved, positively, in the struggles for justice, for religious freedom, for a new economic order, and also negatively in the struggle against oppression, against exploitation and against arbitrary use of power.

Two important matters emerged at the Council discussions as dominant factors in the strategy of 'mission' in the eighties. The first is the need for more personnel for our work in our new "vineyards"— the Boys' Home at Manipay, the Girls' Home at Maruthanamadam, the Multi-purpose Farm at Varany, the new Church work at Paranthan etc., etc. All these tasks need more "labourers" who could satisfy the qualitative criteria necessary for such ventures.

We do not mean to suggest that these ventures are at the moment 'starved'. We are thinking more of the future of these institutions and of the kind of 'ministry' that would be needed for work in these centres. Allied with this problem is the problem of finding more 'workers' for our Churches. Here too the qualitative criteria has been very much in the minds of those who participated actively in the discussions at the Council on this subject.

In the course of his Sermon at the Ordination Service on 15-3-80, Rev. D. R. Ampalavanar, the Preacher, pointed to an important aspect of the Ministry of the Church which, because of its commonplace nature perhaps, has never been given the stress, it needs, on such important occasions:— "What the Pastor *is*, is more important than what he *does.*"

Intellect, a sound knowledge of Theology, and enough wisdom to discern what is right and what is wrong amid the babel of voices at a crisis session of a church committee, are, of course, essential qualifications for a Presbyter, besides his own devotional life.

But it is also good for us to remember that these alone will not take a clergyman too far. As a writer puts it succinctly, "If the clergy get too far out in front of the laity, they may find that there is no one behind them."

In our rural churches, where most problems are "human problems", it is the human touch that will often determine the success or failure of a clergyman's ministry.

"Why do you go to church?" was the question posed to a man by his close friend who had seldom seen the portals of his own church. The reply which made him think loud, was:—

"When we had to take our boy to the city hospital, our Minister *met us there.* He stayed the whole day."

"What did he do? Pray? Read the Bible? Saw the Doctor?"

"No! *He was just there.*"

(The Italics are ours.)

Unless the members of a congregation feel that a Pastor's *presence* is enough balm in times of trouble and anguish, it cannot be said that the Pastor's Ministry has had any impact in the life of the church.

A second important subject that came up before the Council sessions is the role of the youth in church life. The under - 19 constitute half the population of India and the under - 15, almost half the population of Sri Lanka.

In this protuberant backdrop, it is not difficult to see that the future pattern of the Church in India and of Sri Lanka is intimately linked with the future of the youth in these two countries.

The problems of the youth in Sri Lanka have, we know, assumed new dimensions with the intrusion of external forces, as the changing political scene, the influence of the mass media, and the hard core layer of frustration caused by mass unemployment in the country.

The youth have also became the target of a consumer culture and in turn become "vehicles of deculturation". We also know how they have been in certain instances made pawn in power politics and have been even sacrificed in abrupt physical violence.

In this backdrop, it will not be meaningful for the Christian Church to regard them as objects of derision. On the contrary, together with the poor and the marginalised and oppressed minority groups, the Christian Church should learn to discover in the youth of our country, the Asian face of Christ.

In a realistic way, it should be possible for the Religious Education Board to liaise with local Church Committees and youth groups of the churches to formulate *a Scheme* by which local Christian talent at the parish level be selected, put through a period of training in *skills relevant to the man-power needs of the Diocese* and be made available for our various development projects.

In this way, mass frustration of youth regarding employment could be contained. If for a suitable technical job in the Diocese, no Christian young man has been found fit, the blame, we believe, cannot be put entirely on the youth.

On the other hand, it is good for our Christian youth too to remember that their own commitment to the Diocese and to the local church is a factor that will play a large part in their own future and the future of the Diocese. It is good for them to examine their own conscience and pray with James Freeman:—

O, Pattern Maker, tell me, is it true
I shall not find myself until I find *You.*

*J D C S I Bishop's Charge*

## NEW PERSPECTIVES FOR THE CHRISTIAN CHURCH

Delivering his 'charge' to the members of the Jaffna Diocesan Council of the Church of South India which held its 33rd Sessions at Otley Hall, Vaddukoddai from 13th to the 15th of March, the Bishop, the Rt. Rev. D. J. Ambalavanar referred to the opportunity he has had since the last sessions of the Council, of visiting various Churches both in the West as well as in countries of the "Third World". This experience, had enabled him to acquire a greater measure of perspective to view our problems here in Sri Lanka than he ever had before.

### African Churches:

The Churches in Africa, particularly in Kenya, Uganda, Zambia and Nigeria have not merely registered growth in numbers but have faced severe challenges and have become twentieth century witnesses.

### China:

In China, which has been under communist regime for over 30 years, there has been revival and restoration. For the first time, a delegation from the People's Republic of China, attended an international meeting and participated in the World Conference of Religion and Peace at Princeton in September last year.

### The Third World:

A welcome trend in the Churches in the Third World is their enthusiasm and concern for development. But their new found enthusiasm should not make them fall into the temptation of being "patrons" of the poor. The church must work not *for* the people but *with* the people.

It is also necessary that we do not by our development processes create only an elitist society, estranged from the mass of humanity. Development in the Third World, if it is to have meaning, must have its impact on society as a whole and not on individuals only.

The church is not the only organisation involved in Development in the Third World. Government too is involved in it. In this context, it is important that the church should play a unique role which is to enable men to achieve the stature of Christ himself for "man does not live by bread alone".

One of the greatest challenges that the churches of the Third World face is, the lack of personnel. Money or aid may be easy to get. But what is not so easy to get is *people* who can sacrifice their time and talent to work in the "vineyards" which are in dire need of 'labourers'.

### Entering a new Decade:

As the Christian Church in our country enters a new decade, there is evidence of a new surge of enthusiasm but there are also obstacles which appear to beset our path.

The Church at times appears to be uncertain of its mission and timid 'to launch out into the deep'. In the context of the scientific and cultural renaissance in our country, can the gospel be effective? This is a fear in the minds of many.

Paul found himself in Athens in a similar predicament but he was never overwhelmed.

### Counting the Cost:

It is only a Church that can count the cost that can achieve its goal in the present context of world events. What Emil Bruner meant by the "Misunderstanding of the Church" was that the church should not be pre-occupied with its own structures but on its "witness" which would become effective only when there is a singleness of purpose and common understanding of its goal.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB/8920/78.*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna, on Friday, 21st March, 1980.